முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை, கிண்டி, சென்னை–25
அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர்: திருமதி.ஆர்.சாந்தி, எம்.இ.

செ.மு.ஆ.எண்.11282 / நி.4 (2) /2023–27 நாள்: 20.10.2023

பொருள் : பணியமைப்பு – நெடுஞ்சாலைத் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தொகுதி – IV பணி 2021–2022–ம் காலத்திற்கு காலிப் பணியிடங்கள் – இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள்– பணி நியமன ஆணை வழங்குதல் – சம்பந்தமாக.

பார்வை : செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3, கடிதம் எண்.1951/PSD-D2/2023, நாள்.31.08.2023.

*****

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால்,தொகுதி – IV பணியின் கீழ் இளநிலை உதவியாளர் நியமனத்திற்கென தேர்வு செய்யப்பட்டு பார்வையில் காணும் தேர்வாணைய கடிதத்தின்படி நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கீழ்காணும் நபரை தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016ன் பிரிவு 17(1)ன் கீழ் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் ரூ.19500–71900 (நிலை–8)ன்படி இளநிலை உதவியாளர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட ஊதிய ஏற்ற முறையில் கீழ்காணும் நிபந்தனைகளை உள்ளடக்கி இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்து அவரது பெயருக்கெதிரே கலம் 4–ல் குறிப்பிடப்பட்டுள்ள பணியிடத்தில் பணியமர்த்தி ஆணை வழங்கப்படுகிறது.

| பதிவு எண் / பெயர் (ம) முகவரி<br>திரு / திருமதி / செல்வி | | ஆண்/ பெண் | பிறந்த தேதி/ இனம் / கல்வித் தகுதி | இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தப்படும் அலுவலகம்<br>மறு பணி நியமன ஆணை வழங்கும் அலுவலர் |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| <br>VINOTH S<br>14.04.2022 | 1207004049<br>VINOTH S<br>5/14<br>KALLANKUTHU<br>KONANGIPATTI PO<br>NAMAKKAL DISTRICT<br>TAMIL NADU<br>PINCODE : 637013 | ஆண் | 15/06/1999<br>MBC/DC<br>B.E | சென்னை (நெ) திட்டங்கள் உட்கோட்டம் – 3<br>கோட்டப் பொறியாளர் (நெ) திட்டங்கள் சென்னை |

பணி நியமனத்திற்கான நிபந்தனைகள் :–

1) "The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in combined Civil Services Examination-IV (Group – IV).

2) தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016ன் பிரிவு 20 (5) ன்படி பணியில் சேர தேர்வுசெய்யப்பட்ட தனியர் உடற்கூறு குறித்து தீர்மானிக்கப்படவேண்டும். இதன்பேரில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவரால் அளிக்கப்பட்ட உடற்கூறு தகுதிச் சான்றிதழ் தனியரிடமிருந்து பெற்று சரிபார்க்கப்படவேண்டும். குறிப்பாக மாற்றுத் திறனாளிகளைப் பொறுத்தமட்டில் குறைபாடு சதவிகிதம் மற்றும் அவர்களது பணித்திறன் சரிபார்க்கப்பட்டதற்கான சான்றிதழ் மாவட்ட மருத்துவக் குழுவிடமிருந்து பெற்று பணியில் சேரும்பொழுது தனியர் அளிக்கவேண்டும்.

Scanned with ACE Scanner